ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

ஜூலை - ஆகஸ்ட் 2022

ஆண்டு 3 ▲ இதழ் 01

விலை : 100 / -





## கனித்தமிழ் இனித்திடும் கவிஞன்




# முத்தமிழ் கலசம்



இருமாதத்திற்கொருமுறை

ஜீலை - ஆகஸ்ட் 2022

ஆண்டு 3 ▲ இதழ் 01

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The editor of “Muththamizh kalasam”,

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

web :
tamilnenjam.com
email :
editor@tamilnenjam.com

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்.

# ஆசிரியர் பக்கம்

*அன்பின் வாசகர்களுக்கு வணக்கம்!*

*எமது இதழ் வெற்றிகரமான மூன்றாம் ஆண்டில் கால் பதித்திருக்கும் அழகிய தருணமிது. எம்முடன் இதன் வெற்றிக்குக் கைக்கோர்த்து பக்கபலமாக இருக்கும் அனைத்து தோழமைகளுக்கும் நேச நன்றிகள்! முதற்கண், எனக்கென ஒரு அடையாள முத்திரையை இத்துறையில் வெற்றித்தடமாகப் பதிக்க, ஒரு பாதை வகுத்த எம் கௌரவ ஆசிரியர் பெருமதிப்புக்குரிய தமிழ்நெஞ்சம் அமின் ஐயா அவர்களுக்கு எனதன்பின் நன்றிகள்! அவர்தம் பிறந்தநாளைக் கொண்டாடும் இத்தருணத்தில், இவ்விதழ் மூலம் அவரை கௌரவிக்க விழைகிறேன். உயரங்கள் தொட்டு, சிகரங்களைக் கடந்தாலும், அவருடைய தன்னடக்கமும் தனித்திறமைகளும், விடாமுயற்சியும் கடின உழைப்பும் இனிவரும் தலைமுறைக்கும் வழிகாட்டும். தமிழ்வேட்கை கொண்டோரைக் கரை சேர்க்கும். அன்னவர் வழிகாட்டலில் எம் இதழின் வெற்றிப்பயணம் இனிதே தொடரும். அவரின் தன்னலமற்ற தமிழ்ப்பணி மென்மேலும் சிறப்புற, இதயபூர்வமான நல்வாழ்த்துகள்! அவருக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகளை நம் வாசகர்கள் சார்பாகத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் தேகாரோக்கியத்துடன் நீடூழி வாழ்க!*

*நன்றி!*

– சித்தி வ.ஃபிரா
ஆசிரியர்

# பெண் வலிகளின் சுமைதாங்கியா

பெண்களாகப் பிறந்துவிட்டால் சாபக் கேடா
பெண்ணினமும் வலிகளினைத் தாங்கும் கேடா
கண்கவெனப் பெண்களையும் மதிப்போர் இல்லை .
காளையர்க்கே அடிமையாக ஆக்கல் நன்றா
மண்ணுலகில் சுமைதாங்கும் பெண்கள் என்றும்
மாசற்ற மாதாவே உணர்வீர் நீங்கள் .
திண்ணமாகச் சொல்லுகின்றேன் சுமையும் தாங்கும்
திறமையினைப் போற்றிடுங்கள் நாளும் இங்கே

உண்மையினைச் சொல்லுவதால் தயக்கம் இல்லை
உயிர்ப்பாலாய் உதிரத்தைத் தந்த தெய்வம்
கண்களிலே கண்ணீரும் பெருக்கெ டுத்தால்
காசினியும் சிறந்திடுமா நீரே சொல்வீர் .
விண்ணுலகம் செல்லுகின்ற வரைக்கும் பெண்கள்
விடியலினைக் காணுதற்கு வாய்ப்பே இல்லை
எண்ணங்கள் சரிதானா சிந்திப் பீர்கள்
ஏற்றங்கள் பெண்மைக்கு வேண்டும் வேண்டும்

முனைவர். பாவலர். சரஸ்வதி பாஸ்கரன்,
திருச்சி,  தமிழ்நாடு



# வாழ்தல் இனிது

## – நிஷா ரஹ்மான்



''இந்தக் கணம் மட்டுமே உங்களுடையது''

உங்கள் வாழ்க்கை எத்தனை நீண்டதாகவும் இருக்கலாம். ஆனால் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் காலம் நிகழ்காலம் மட்டுமே. கடந்து போன காலத்தை இனி மாற்ற முடியாது.அது திரும்பி வராது. நல்லதோ, கெட்டதோ முடிந்து போனதெல்லாம் வாழ்க்கையின் வரலாறு ஆகி விட்டது.

கடந்த காலத்தில் பயணித்து நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை உங்கள் விருப்பப் படி மாற்றி விட முடியாது.

எதிர்காலம் என்றுமே ஒரு கேள்விக்குறி தான். அது எப்படி இருக்கப் போகிறது என்பதை தீர்மானிக்கும் திறன் உங்களிடம் இல்லை.

இனி மிஞ்சி இருக்கும் காலம் எத்தனை? அதில் என்னென்னவெல்லாம் நடக்க இருக்கிறது என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.

எதிர்கால நிகழ்ச்சிகளை உங்களால் எட்டிப்பார்க்க முடியாது.

உங்களது கட்டுப்பாட்டில் இல்லாத கடந்த கால நினைவுகளிலும், எதிர்காலக் கனவுகளிலும், இப்போது உங்கள் கட்டுப் பாட்டில் இருக்கக் கூடிய நிகழ் காலத்தை இழந்து விடாதீர்கள்.

இந்தக் கணம் மட்டுமே உங்களுடையது. நீங்கள் நினைத்தபடி நடந்து கொள்ள இந்தக் கணத்தில் மட்டுமே முடியும்.

உங்களால் செயலாற்ற முடிந்த இந்த ஒரு கணத்தை நீங்கள் எப்படி

*பயன்படுத்துகிறீர்கள் என்பதை வைத்தே நீங்கள், உங்கள் வாழ்க்கையை நிர்ணயம் செய்து கொள்ள முடியும்..*

*நவீன மருத்துவத்தின் தந்தை என்ற ழைக்கப்படும் சர் வில்லியம் ஓஸ்லர் (Sir William Osler) தன் மேஜையில், மகாகவிகாளிதாசரின்' ஒருகவிதையின் ஆங்கில மொழிபெயர்ப்பை எப் போதும் வைத்திருப்பார்.*

***"நேற்று என்பது வெறும் கனவு***
***நாளை என்பதோ***
***கற்பனை மட்டுமே.***
***இன்று சிறப்பாக வாழ்ந்தால்,***
***அது நேற்றைய***
***கனவையும் இனிமையாக்கும்***
***நாளைய தினத்தையும்***
***நம்பிக்கைக்குரியதாக்கும்***
***அதனால் இன்றைய***
***தினத்தைக் கவனி***
***அதில் தான் விடியலுக்கான***
***தீர்வே உள்ளது"***

*எத்தனை அழகாக சொல்லப் பட்ட ஆழமான தத்துவம் இது ?*

*நீங்கள் அதிகமாகக் கோட்டை விடுவது நிகழ்காலத்தைத் தான்.*

*நேற்றைய வருத்தங்களும், நாளைய கவலைகளும் தான் அதிகமாக உங்கள் நிகழ்காலத்தைத் திருடிக் கொண்டிருக்கின்றன.*

*கடந்த காலத்தில் அப்படியாகி விட்டதே, இப்படியாகி விட்டதே என்று வருத்தப்பட்டும்,...நாளைஎன்னஆகுமோ என்று கவலைப்பட்டும் என்ன பயன்? வருத்தப்படுவதால் கடந்தகாலம் மாறி விடுமா? கவலைப்படுவதால் எதிர்காலம் தானாக சிறந்து விடுமா? இல்லவே இல்லை.*

*உண்மையில் வாழ்க்கையில் எல்லா வெற்றிகளுக்கும், மேன்மைகளுக்கும் சூட்சுமம் இந்தக் கணத்தில் தான் உள்ளது. இந்தக் கணத்தில் தான் நீங்கள் ஏதாவது செய்ய முடியும்.*

*நீங்கள் கவனிக்க வேண்டிய மிக முக்கி யமான கணம் இந்தக் கணம் தான்.*

*இருட்டில் ஒரு நெடும்பயணம் வாக னத்தில் போக வேண்டி இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அத்தனை தூரமும் தெருவிளக்குகள் உங்களோடு வரப் போவதில்லை. நீங்கள் பயணிக்கும் வண்டியில் முன் விளக்குகள் சரியாக எரிந்தால் போதும். அத்தனைதூரத்தையும் சிரமம் இல்லாமல் கடந்து விடலாம். வாகனத்தின் முன் விளக்குகளால் சில அடி தூரம் தான் வெளிச்சம் தர முடியும் என்பதால், பயணக்கடைசி வரை தெருவிளக்கு எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்ற கோரிக்கை எப்படி சாத்தியமற்றதோ.. அப்படித்தான் எதிர் காலம் முழுவதற்கும் தயார்படுத்திக் கொள்வதும்.*

*தாமஸ் கார்லைல் மிக அழகாகக் கூறி யுள்ளார். "நம்முடைய முக்கிய வேலை தூரத்தில் மங்கலாகத் தெரிவது என்ன என்பதைத் தெரிந்து கொள்வதல்ல.*

நம் முன்னால் இருப்பது என்ன என்று தெரிந்து அதை சிறப்பாகச் செய்வது தான்''

இந்தக் கணத்தை நீங்கள் சிறப்பாக உபயோகித்தால், அப்படியே உங்கள் வாழ்க்கையில் வரும் ஒவ்வொரு கணமும் சிறப்பாகி, எதிர்காலம் தானாக மிகச்சிறப்பாக உருவாகி விடும் என்பதில் சந்தேகமே இல்லை.

நேற்றைய நிகழ்வுகளில் இந்தக் கணத்தில் ஏதாவது பாடம் உணர்ந்தீர் களானால், அது உங்களை பக்குவப் படுத்தும்.

நாளைய நாளின் சிறப்புக்காக திட்டமிட்டு இந்தக் கணத்தில் ஏதாவது செய்தீர்கள் என்றால், அது நாளைய நாளில் உங்களை முன்னேற்றும்.

ஆக இந்த நாளில் இந்தக் கணத்தில் நீங்கள் செய்வதை வைத்துத் தான் நேற்றைய அனுபவத்திற்கும், நாளைய நடப்பிற்கும் நீங்கள் சிறப்பை ஏற்படுத்த முடியுமே தவிர, அவற்றைக் குறித்த வருத்தங்களாலும் கவலை களாலும் அல்ல.

அது அல்லாமல் வருத்தங்களாலும், கவலைகளாலும் கழிக்கப்படும் காலங் கள் வீணடிக்கப்படுபவையே. அதனால் யாருக்கும் எந்த ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை.

கடைசி வரை உங்களால் செயல்பட முடிந்த காலம் நிகழ்காலம் மட்டுமே.



# தத்துவ எல்லை

உலகம் முழுவதும்
வறண்டு துடிக்க,

என் காதல் சின்னம்
உன் விரலைக் கடிக்க:

இயற்கையின் அழகில்
இறைவனின் பிம்பம்;

நாம் வாழும் நாட்களில்
வறுமையில் இன்பம்:

கழிந்த வருடங்களில்
கற்பனை வேசம்,

என் காதல் என்றும்
மெய் மறந்த (சு)வாசம்!

இறைவனும் இயற்கையும்
நம் காதலின் பிள்ளை,

இனி படர்ந்து விரியட்டும்
இத்தத்துவ எல்லை

**வெ.ஹேமந்த் குமார்,**
ஈரோடு

எனவே நிகழ்காலத்தில் மிகுந்த கவனம் வையுங்கள். நிகழ்காலத்தில் சூழ்நிலைகள் எவ்வளவு மோசமாக இருந்தாலும் புலம்பிக் கொண்டே காலத்தை கழித்து விடாதீர்கள். புலம்ப லிலும், வருத்தங்களிலும் நிலைமை மேலும் மோசமாகுமே தவிர எதுவும் மாறி விடாது. எந்த ஒரு தீர்வும் கிடைக்காது.

தரப்பட்டிருக்கும் சூழ்நிலைகளில் எப்படி முடிந்த அளவு சிறப்பாக செயல்படலாம் என்று யோசித்து அதன்படி செயல்படுங்கள்.

மோசமான சூழ்நிலைகளும் சிறிது சிறிதாக மாறி உங்களை மேலான சூழ்நிலைகளுக்குப் போக வழிவிடு வதைக் கண்கூடாக காண் பீர்கள்.

உங்ளுக்கு முழுக்கட்டுப்பாடு இருப் பது இந்தக் கணத்தில் தான்... என்பதால் வாழ்க்கையின் வெற்றி யின் சூட்சுமம் முழுவதும் இந்தக் கணத்தில் தான் இருக்கிறது என்பதனை உணர்ந்து செயல்படுங்கள்.

நதி நீரோட்டத்தில் ஒரு முறை காலை நனைத்த நீரில் இன்னொரு முறை காலை நனைக்க முடியாது என்று சொல்வார்கள். ஒவ்வொரு முறையும் நீர் புதிதாகவே இருக்கிறது.

கால ஓட்டத்திலும் ஒவ்வொரு கணங்களும் புத்தம் புதியவையே.

நீங்கள் இந்தக் கணத்தில் வாழும் முறையைப் பொருத்தே உங்களுக்கு அனுகூலமாவதும், பயனற்றுப் போவ தும் தீர்மானமாகிறது.

காளிதாசர் சொன்னது போல 'நம் விடியலுக்கான தீர்வு இந்தக் கணத்தில் தான் உள்ளது'

மாற ஆசைப்படுகிறீர்களா? அதற்கான முதல் அடியை இந்தக் கணத்தில் எடுத்து வையுங்கள். ஏதாவது சாதிக்க ஆசைப்படுகிறீர்களா? அதற்கான பிள்ளையார் சுழியை இந்தக் கணத்தில் போடுங்கள். நாளை செய்யலாம் என்று விட்டு வைப்பவைகளை நீங்கள் ஒருபோதும் செய்யப்போவதில்லை.

நாளை என்பது உங்களிடம் வருமா என்பது உங்களுக்கே விடை தெரியாத வினா.

உங்களிடம் இருப்பதெல்லாம் இந்தக் கணம் மட்டுமே.

இருப்பதை சரியாகப் பயன்படுத்தி னால் மட்டுமே வருவதெல்லாம் சரி யாகும். வருங்காலமும் சிறப்பாகும்..

«இனிது! இனிது ! வாழ்தல் இனிது!

நற்சிந்தனைகள் இனியும்
தொடரும்,

# இரவு

விரட்டியடிக்கப்பட்ட
பகற்பொழுது
மெல்லவே கசிந்து
ஓடி ஒளிகிறது
மலைமுகட்டின் பின்னால்

கருஞ்சாந்து பூசி
அந்தரத்தில் ஆடுகிறது
உண்மைகள் உறைந்துகிடக்க
பொய்கள் கரைசேர்கின்றன

மெல்லிய ஒலி
இருளை கிழித்து
அரங்கேறுகிறது

எங்கிருந்தோ அழைக்கும்
காட்டுக்குயிலைப்போல்

நிலவை கிரீடமாய் சூடிய
உனக்கு வழிகாட்டுகிறது
இருளைக் கடந்து
செல்வதற்கு

இருள்மேக கூட்டிற்குள்
நட்சத்திர கூட்டங்கள்
கூடுகட்டி வாழ்கின்றன

இருளில் யாசிக்கும்
மெல்லிய காற்று
வழிதேடி அலைகிறது

அன்பின் பரிணாம ஊற்றில்
தாகங்களை தணித்து
கொள்ள

எங்கும் வியாபித்திருக்கும்
அடர் இருளுக்குள்
அயர்ந்து கிடக்கிறது

நாளெல்லாம் உழைக்கும்
சுமைதூக்கும் தொழிலாளி

தாலாட்டும் கைகளில்
தவழ்ந்து கிடக்கிறது

ஆடும் தொட்டிலுக்குள்
அயராத மழலை

நீ மட்டுமே
விழித்துக்கொண்டு
இருக்கிறாய்

இரவுக் காவலனாய்
அண்ட சராசரங்கள்
ஆழிக்குள் மூழ்காதிருக்க

ஞா.முனிராஜ்
அருப்புக்கோட்டை

## பூக்களும் புரட்சியும்

காம்புகள் மட்டுமே
காதலெனில்
பூக்களில்
தேன் இருக்காது

வெடிக்கும் புரட்சி தான்
வாழ்க்கையெனில்
பூக்களே இங்கு பூக்காது

- நேசமுடன் ஈசு

# றோணியோக்களின் வளர்ச்சி-03



வாழும்வரை வாழ்ந்தாக வேண்டும் அந்த வரையறைக்குள் வாழும் நாம் நம் சிந்தனைக்குள் உள்வாங்கும் திறமைகளுடனான எமது பயணமும் நீடிக்கிறது. செயல் திறன்களால் ஒவ்வொரு வர்களும் புகழுக்குள் பூத்து மணம் வீசுகின்றனர். அந்தவகையில் எழுத்துலக பிரவேசம் என்பது மனதுக்கு மகிழ்வைத்தரக்கூடியது. தானும் சந்தோஷித்து பிறரையும் ஏதோ வொருவகையில் நன்மையடையச் செய்வதே கலைத் துறையின் உயரவான செயல் பாடாகும் தானும் வளர்ந்து ஏனையோரையும் வளரச்செய்யும் உயர்ந்த பண்பு ஒரு எழுத்தாளனுக்கு நிச்சயம் இருக்கும். இருக்கவேண்டும். அதனால்தான் கடந்த காலங்களில் இலக்கியத்தை வளர்க்க அரும்பணி ஆற்றினார்கள் அன்றைய இலக்கிய வாதிகள் றோணியோக்களின் மூலம். அந்த றோணியோக்களை அறிமுகம் செய்யும் இச்சந்தர்பத்தை கௌரவமாக நான் கருதுகிறேன்

இனிவாருங்கள் பாசத்தோடு...
அழைக்கிறேன்

''பாசம்'' என்னும் றோணியோவை பார்வையிட.பக்குவமாய் படித்திடுங்கள்.

உள்ளே அழகான எழுத்தமைப்பு. படிக்கத்தூண்டும் படைப்புக்கள். 32 பக்கங்களை கொண்டுள்ளது. காலாண்டிதழாகவும் ஓராண்டு பூர்த்தி மலராகவும் என்கரம் பூத்துள்ளது. 1989 ஆம்ஆண்டு ஜே.பௌஸர் நியாஸ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்துள்ளது. “பாசம்” என்றும் வீசும் வாசம்....! என்ற கோஷத்தை அழகாய் பதித்துள்ளது.

ஒரு கவிதை அழுகிறது நஸீலா ஸலீம் பண்டாரவளை, பறிபோன இதயம் ஸரீனா லதிப் புத்தளம்., தொடர்கதை_ விட்டில் பூச்சிகள் - 1 திக்குவல்லை ஸப்வான், உறவொன்று உயிர்பெற! கல்முனை பரீனா யாசீன், காத்திரு அம்மா

எஸ்.யூ.கமர்ஜான்பீபீ ஹுனுப்பிட்டிய., ஓர் இன்பத்திற்காக, ரிஸ்வி ஷியாம் அக்குறனை, ரம்புக்கலையான் பௌஸர் இஷாதா., விதியைவெல்வாயா? எஸ். இலங்கேஸ்வரன் ஊவா ஹைலண்ட்ஸ், வேண்டாம் வறுமை! ஹஃமான் எம்மாஹிர் நிந்தவூர்., மலரும் மங்கையும் நிந்தவூர் பானுஹாசன்,உதயத்தைத்தேடும்வாழ்வு... செல்வன் எம்.ராஜன் நசூர்தீன், ஐந்தாம் சொந்தம் கலையுகன் தஸ்லீம். நிந்தவூர் - 2, சிந்தனைகள் எதுவுமில்லை. ஐ.எம். ஹுஸைன், வாசகர் பேனாவிலிருந்து, நல்லதைச்சொல்லுகிறேன்.டீ.மகேந்திரன் ஹப்புத்தளை, தோல்வியின் பிரதிபலிப்பு. திவுரும் பௌஸர் எம்.எம்.சாதிக், கற்பனை - ஷாஹிர்ஷா தாஸிம், எமது உறவு வாழட்டும் என்.ஜி.மனோகரன் ஹப்புத்தளை, இது ஏன்... யாழ்ப்பாணம் முருகு, இரும்புக்கம்பிக்குள் ஒரு சிவப்பு ரோஜா... செல்வி ஐனுல் ஸலாம் இறத்தோட்டை., வேறுபாடு... பொகவந்தலாவை சோ.ஸ்ரீதரன், எங்கள் தேசம் எஸ்.எம்.அன்ஸார் கொழும்பு, அவசரக் கோலமும் அபஸ்வர ராகமும்! மாத்தளை. எம்.எம்.கமால், முட்டாள்கள்! எம்.ஜி.எம். நுஸ்ஹான். தாராப்புரம்,மன்னார், அக்கினி தாசிகள் விருதோடை புரட்சிமகன், ஆசையின் விபரீதங்கள் ஹெம்மாதகமை ஏ.எல். எஸ்.பரீனா, நல்லவனாகிடு மூதூர் எஸ் என்.தாஹா., குணமே குடும்பத்தின், அழகு! எம்எஸ்.எம்.பாயிஸ். மிரஹவத்த, திருந்திவாழுங்கள்!... செல்வன். பஸ்லி ஹமிட் தர்காநகர், பாச உள்ளம்! சாய்ந்தமருது - 06 சபீனா ஏ மஜீத், சுப்பர் ஸ்டார். கவிப்பிரியா கே.ஆர். நிஷா., கவிதைக்கு கருவானாள்! ஏ.எஸ். பாலச்சந்திரன் உடபுஸ்ஸல்லாவ., மறையாத பாசம் செல்வி.றினோஸா ஹாரிஸ். பேருவளை, வஞ்சியின் வாழ்வு. ஆயிசா ஜமால் டீன், போலி அன்பு! பங்கொள்ளாமட செல்வி தஸ்லிமா உமர், நாள் வி.க.விஜயந்திரன் ஹப்புதளை, புதுப்பூக்கள் பூக்கட்டும்.....! செல்வி. பிரமிளா கந்தையா. பொகவந்தலாவ, நாங்கள் ஏழைகள்! மர்ஹூம் கே.எம். ஐசீம், வாழ்வோம் நாம்! அக்கரைப் பற்று றாபிதா ஜே சம்சுதீன், ஏமாற்றம்! எம்.எச். முகம்மது நபீல். புத்தளம், தற்பெருமை...! சியானா ஹமீட் - தர்காநகர், நேபொடதியதலாவ ஆயிஷா ஷேக்., எழிலான மலையகம்! பொகவந்தலாவ பி.கிருஷ்னா, பிறர் நலம்...! புத்தளம் றிஸ்வானுல் ஜென்னா., சோகங்கள் தர்கா நகர் செல்வி ரிஸ்னா. ஏ.ரிஸ்வியா, தேச பக்தர்கள்! ஏ.சி.எம்.நசார் கொழும்பு, ப (கு) ணம்...! இதல்கஸ்ஹின்ன செல்வா, இதய ராகங்கள்! பொலன்னறுவை புது நகரான் அஷ்ரப், தேடுகிறோம்...! நஸ்லியா.எம். ஸலீம் பண்டாரவளை., காதல் வஜிஹா ஆப்டீன். மடவளையூர்., மனிதனின் எதிரி எயிட்ஸ். தெமட்டகொட எம்.எச்.எம். நஸார், புரட்சி விடியல்! ரீ.எல். நிரஞ்சனி நேபொட, சமயம் பார்த்து வருவதில்லை..! சஹிட் எம்.நியாஸ்.மீரஹவத்த போன்ற எழுத்தாளர்கள் பாசத்தோடு பாசத்தில் எழுதியுள்ளார்கள். .

இன்ஷாஅல்லாஹ் மீண்டுமொரு றோணியோவோடு சந்திக்கும்வரை உங்களிடமிருந்து விடைபெறும். நான்.

**எஸ். யூ. கமர்ஜான் பீபீ**
வத்தளை

# இடர்களை எதிர்த்து

இடர்கள் உன்னை சுற்றிச் சூழும்
தயங்கி வீழ்ந்து விடாதே
புகையாய் உன் கண்களை மூடும்
போதும் அச்சம் கொள்ளாதே
எட்டி உன் கைகளை பற்றிக்
கொள்ளும் போது உதறி விடு
சவால்கள் உன் நம்பிக்கையை
கொன்றுவிடும்
உன் துணிச்சலை மூழ்கடிக்கும்
உன்னை எட்டி உதைக்கும்
தயங்காதே
உறுதியாக எழுந்து நில்
நேரான முறையில் பயணி
உன்னை இடர்கள் பற்றிக்
கொள்ளாது
மற்றவர்களுக்கு இடர் இழைக்க
விரும்பாதே
அந்நியருக்கு நல்லதே செய்
சவால்களோடு போராடு
வெற்றியை நோக்கி பயணி
தோல்வியை நினைத்து
கலங்காதே
நிச்சயம் உன்னை நீ
வெற்றியாளனாக காண்பாய்

கவிதாயினி கவிச்சிரம்
**நுஷைபா நஷீர்**

# பதியமிடல்

உன்னால் ஓர் இலையசைவுப்
பார்வையினைச் செலுத்தி
நகர முடிகிறது

கரும்பாறையொன்றின்
மனயிடுக்குகளில்
வேரூன்றச் செய்யமுடிகிறது.

என்னின் தடங்களில்
உயிரெறும்பாக
ஊர முடிகிறது

எந்தக் காட்டினுள்ளோ
மரமெழுதிய பெயராய்
நாம் வாழ முடிகிறது

மனத்தரையின் மேல்
அழுத்திப் பதிந்திருக்கும்
நம் உயிர்ச்சுவடுகள்

காய்ந்துவிடும்
முன்பு கூறிவிடு
காதல் ரோஜாவினை
திருமணப் பதியமிடவியலுமென்று!

**வ. ரகுநாத்**
மதுரை

# பாட்டி வைத்தியம்

தோல் நோய்கள் தீர இதில் ஒரு கைமுறையை செய்து பாருங்கள்! தக்க பலன் கிடைக்கும்.

*10-15 மருதாணி இலைகளை அவித்து டீயாக தினசரி குடித்து வரலாம். (கர்ப்பிணிகளும், கர்ப்பம் தரிக்க எதிர்பார்த்திருக்கும் பெண்களும் கண்டிப்பாக இதைக் குடிப்பதைத் தவிர்க்கவும்)

*தொட்டாற் சிணுங்கி செடியை, இரண்டு பல் பூண்டு சேர்த்து அவித்து, தினசரி அரை டம்ளர் குடித்து வர தோல் நோய்கள் தீரும்.

*கடுக்காயின் உள் விதையை நீக்கிவிட்டு பொடி செய்து ஒரு டம்ளர் நீர் விட்டு அவித்து, அரை டம்ளராய் வற்றியதும் அதை இரவில் குடித்து வர தோல் நோய் குணமாகும்.

இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் தொப்புளில் வேப்பெண்ணெய் சில சொட்டுகள் விட்டு தொப்புளைச் சுற்றியும் பூசி வந்தால் வெகு சீக்கிரமே குணமாகும்.

தோல்நோய் சீக்கிரமே குணமாக கண்டிப்பாக கடலுணவுகள், ஊறுகாய் வகைகள் தக்காளி போன்றவை தவிர்க்கப் படவேண்டும்.

தொடர் விக்கல் உடன் தீர

தொடர் விக்கல் உடன் நீங்க... கண்களை மூடி, கருவிழிகளுக்கு மேலாக இமைகளை வட்டமாகத் தடவி விட வேண்டும்.

**ஈஸ்வரி** திருத்தணி

# நம் தமிழ்

தாய்மொழியாம் நம் தமிழ்மொழி
தரணி போற்றும் நற்செம்மொழி

சங்கங்கள் கோர்த்த மணிமொழி
சான்றோர்கள் வளர்த்த நன்மொழி

அயலவர்களை ஈர்த்த அருமொழி
ஆர்வமுடன் பயிலும் அமுதமொழி

குமரிக்கண்டம் இவள் பிறப்பிடமோ
ஆதிசிவன் கொடுத்த தேன்குடமோ

காலமாற்றத்தை காட்டும்
காலக்கண்ணாடி
கருத்துச்செறிவில் உலக முன்னோடி

தீஞ்சுவையாய் வாழ்வை
வகுக்கும் திருக்குறளாம்
அன்பொடு இன்ப ஒழுக்கம்
உரைக்கும் அகநானூறாம்

கனிச்சுவை தோய்ந்த
கலித்தொகையாம்
புகழோடு வாழ புத்துணர்வு
நல்கும் புறநானூறாம்

தமிழ் மண்ணை ஆண்டவர்கள்
ஆற்றல் கூறும் ஆற்றுப்படையாம்
கவிதை சுவை கனியும்
இராமகாதையாம்

தீவண்ணமாய் திகழும் திருவாசகமாம்
கற்கும் நெஞ்சை களிப்புறச் செய்யும்
இலக்கிய கொத்துக்களாம்

திக்கெட்டும் மணம் பரப்பும்
தேன்தமிழ் சொட்டுக்களாம்
இவைகளே நம்
செந்தமிழ் சொத்துக்களாம்

**கவிஞர் சாரா**
மணலூர்பேட்டை

# நமது உலகம்

மலைகளைத் தீட்டி
மகிழ்ந்த நீ

மரங்களைத் தீட்ட
மறந்து விட்டாய்.

மரங்கள் சிலவற்றை
நான் வரைந்து
முடிக்கையில்

இப்போது
கானகமாய்க் காட்சிப்படுகிறது
ஓவியம்.

கானகம் வந்ததும்
நம் உத்தரவின்றி
மேலே வந்து விட்டது வானம்.

உடன்
கதிரவனும்
கருமுகில் கூட்டங்களும்
வரத்தொடங்கின.

சில்லென்ற காற்று
இதமாய் வீசியதும்
மழை
பொழியத் தொடங்குகிறது
வானம்.

அருவிகள்
ஆறுகள்
பறவைகள்
விலங்குகளென

இன்னபிறவெல்லாம்
அழகாய் வரைந்து
முடிக்கிறோம்.

இறுதி பாக்கியாய்
எல்லாம் வல்ல
மனிதனை
நம்மை நாமே
நாம் தீட்டி முடிக்கிறோம்.

ஆரவாரத்துடன்
இயற்கை எழிலோடிருந்த
கானகம்

அக்கணம் முதற்கொண்டு
தன் பொலிவை இழந்து
மெல்ல மெல்ல
அழியத் தொடங்குகிறது.

**பாரியன்பன் நாகராஜன்**
குடியாத்தம் - 632602



## தன்முனைக்கவிதைகள்

●
பரவும் மௌனம்
கலைந்து கிடக்கிறது
வரவேற்பு அறையில்
குழந்தையின் பொம்மை

**ஆ.முருகேசுவரி**

●
ஒவ்வொரு வீட்டிலும்
இருக்கின்றார் புத்தர்
ஆசைகளைத் துறந்த
இல்லத்தரசி வடிவில்...

**ஜனனி குமார்**

●
குழந்தையின் செல்லச்
சிணுங்கல் அழகு
இரசித்த படியே
சமாதானம் செய்கிறேன்

**ரூபா மணிகண்டன்**

●
சாலையின் ஓரம்
நெகிழிப்பை குப்பை
புதிதாக முளைத்திருந்தது
தூர்வாரியக் குளமொன்று...

**தா.உமா, பூம்புகார்**

●
உறங்கும் மனதைத் தட்டி
எழுப்பும் இரயில் பயணம்
விழுந்து எழுந்தவரை
'மகாத்மா'வாக்கி விட்டது

**லட்சுமி செந்தில்**

--------

*(தன்முனைக்கவிதைகள் படைப்பாளர் பேரவை அங்கத்தவர்களின் படைப்பு)*

# நூல் பொட்டு

கழுத்தில் பாம்பென
சுருண்டிருக்கும் டேப்
கையில் சூலாயுதமாய்
செருகியிருக்கும்
கத்திரிக்கோல்
அறையெங்கும் பீரங்கிகளாய்
வீற்றிருக்கும் நூற்கண்டுகள்
தையலின் காலமுழுத்துகிற
இயந்திரம் மந்திரமோத
கிழிந்ததாய் கூறிய
வாழ்வைத் துணியோடும்
துணிவுகளோடும்
இணைத்துக்கொள்கிறது
ஒரு கைம்பெண் சாமி

**வ. ரகுநாத்**
மதுரை

.............................................

ஹைக்கூ

அழகிய கோலம்
வாசலில் இருக்கின்றது
காற்றுதிர்த்த இலைகள்.

பட்டினிக்காலம்
தாராளமாய் இருக்கின்றது
குப்பைத் தொட்டியில் உணவு

பிரியாவிடை தினம்
அழுது தீர்க்கிறது
எனது பேனா

கொடுத்தாருக்குக் குறைவில்லை
நிறையக் கிடைக்கிறது
ஏமாற்றம்

விலைவாசி உயர்வு
தாராளமாக் கிடைக்கிறது
அரசியல் வாதிகளுக்கு ஏச்சு

**மக்கொனையூராள்**

# துளிர் விடும் மனிதம்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

விழியோரம் துளிர்த்த நீரை சிரமப்பட்டு சரி செய்ய முயன்று கொண்டிருந்தாள் மாஹிரா..

அழுவதைத் தவிர வேறெதனை யும் அவளால் செய்ய முடியவில்லை. எத்தனை வருடங்கள் தான் இப்படியே தன் பிள்ளைகளை ஏமாற்றி வாழ்வது?

''அடுத்த முறை செய்வேன்''

"அடுத்த பெருநாளைக்கு எல்லாம் மாறிவிடும்'' "அடுத்த பெருநாளைக்கு உனக்கு ஆடை அணிவித்து அழகு பார்ப்பேன்" என்ற வார்த்தைகளெல்லாம் இந்த முறையும் பொய்யாகிப் போவதை நினைக்கையில் இவை எல்லாமே கனவாகி விடக் கூடாதா என ஏங்கினாள் அவள்..

முன்பெல்லாம் அவள் கணவன் ரிஷாத் எங்காவது கண்ணில் படும் வேலைகளை செய்து அன்றன்றைக்கு உண்பதற்கான வழிகளை செய்து வந்தான்.

அதன் பின்னர் சடுதியாக நாட்டில் உருவான கொரோனா எனும் நிலைமை அனைவரையும் வீட்டுக் குள் முடக்கிப் போட பேச முடியா மௌனியாய், உடல் பலமிருந் தும் அதை உபயோகிக்கத் தெரியா ஊனமுடையவனாய் அவன் மாறிப்போக இரண்டு வருடங் களின் பின் எல்லாம் ஓரளவு சீராகியதன் பின்னர் பழையவாறு தன் வேலைகளை மீண்டும் தொடர்ந்தான் அவன்.

மூன்று பிள்ளைகளின் பெற்றோர் கள் தான் ரிஷாதும் மாஹிராவும். தங்கள் பிள்ளைகளை படிக்க வைப்பது தொடக்கம் அவர்களது எல்லாவிதத் தேவைகளையும் நிறைவேற்றுவதுவரை அனைத்தையுமே கணவன் மனைவி இருவரும் பெரும்பாடுபட்டே செய்ய வேண்டியிருந்தது.

பிள்ளைகளுக்கான செலவுகள் தொடக்கம் அவர்களுக் கான உணவு வகைகள் வரை அனைத்தையும் பார்த்து பார்த்து ஒரு காலத்தில் செய்து வந்த அவர்களுக்கு இடி விழுந்தாற்போல் வந்து சேர்ந்தது இலங்கை நாட்டினுடைய பொருளாதார சிக்கலும் சடுதியான விலையேற்றமும்.

இப்படி எந்த ஒரு பெரு நாளைக்கும் தன் பிள்ளைகளுக்கு சரியான ஆடைகளை பெற்றோரால் வாங்கிக் கொடுக்க முடியாமல் போவது வாழ்வின் பெரும் துரதிர்ஷ்டமே. இருக்கும் பழைய ஆடையை அல்லது ஏற்கனவே வாங்கி வைத்து ஓரிரு தடவைகள் போட்ட ஆடையைத் தான் ஒருவாறு குழந்தைகளுக்கு அணிவித்து சமாளிப்பாள் தாய்.

ஆனால் கடந்த நோன்புப் பெருநாளன்று பிள்ளைகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நினைக்கை யில் அவள் மனம் வெம்பி கனன்றது.

''அடுத்த ஹஜ்ஜுப் பெரு நாளைக்கு எப்படியேனும் புது ஆடைகளும் புத்தம் புதிய செருப்பும் வாங்கி உங்களை அழகு பார்ப்பேன் கண்மணிகளே'' எனக் கூறி அவர் களை நெஞ்சோடு அணைத்துக் கொண்டது அவளுக்கு இன்னும் நினைவில்...

''உம்மா.. வரப்போற ஹஜ் பெருநாளைக்கு நானா கூட நானும் நம்மளோட சொந்தக்காரங்க வீட்டுக்குப் போய் பெருநாள் சல்லி சேர்த்து வருவேன்'' குதூகலமாய் கூறிய தன் சின்ன மகனை அள்ளி அணைத்துக் கொண்டாள் தாய்..

ஹஜ் பெருநாளைக்கு இன்னும் ஒரு மாத காலம் இருந்த போதும் தன் பிள்ளைகளின் எதிர்ப் பார்ப்பை தன்னால் நிவர்த்தி செய்ய முடியாதே என நினைக்கையில் அவளால் எந்த ஒன்றையும் செய்ய முடிய வில்லை. பிள்ளைகளுக்கு சொல்லிப் புரிய வைக்கும் அளவுக்கு அவர்களுக்கு வயதும் இல்லை.

என்ன செய்வது எனத் தெரியாதவாறு முடிந்தவரை தன் வீட்டில் பயிரிடப்பட்டிருந்த கத்தரிக்காய் மற்றும் வெண்டிக் காய்களை பறித்து வந்து சிறிது சிறிதாய் வெட்டி கறி சமைப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தாள் மாஹிறா.

வானமோ என்றைக்கும் இல்லாத வாறு அன்றைக்கு மழையை சோவெனக் கொட்டத் தொடங்க இடி மின்னலுக்கு ஈடுகொடுக்க முடியாத அவளது குடிசை யின் ஒரு பகுதி மெதுவாய் நீருக்கு அடிமையாகத் தொடங்கியது.

அந்தோ பரிதாபம்! குழந்தை கள் மூவரையும் அள்ளி அணைத்து தனக்குள் மறைத்துக் கொண்டு அவள் கண்களை மூடியபடியே அழுது தீர்த்தாள். வேலை தேடி அலைந்துவிட்டு வந்த கணவன் தன் அன்பு மனைவியினதும் பிள்ளை களினதும் நிலையைக் கண்டு கதிகலங்கி போக செய்வதறியாது அழுவதைத் தவிர வேறு வழி தெரிய வில்லை.

இப்படியே அவர்களது நாட் கள் நகர பெருநாளுக்காய் சில வீடுகளில் பலகாரம் செய்யப் படுவதும் ஆங்காங்கே ஆடை வாங்க மக்கள் செல்வதும் ஒரு சிலர் பை நிறைய ஆடைகளை வாங்கி வந்து வீடுகளில் குவிப்பதும் மீண்டும் கடைகளுக்கு செல்வதுமாய் ஊரே குதூகலமாய்க் கிடந்தது.

பணமில்லை என்கிறார்கள். விலையேற்றம் என்கிறார்கள். பொரு ளாதாரச் சிக்கல் என்கிறார்கள். ஆனால் சுற்றியிருக்கும் இந்த மக்களுக்கு மட்டும் எப்படித்தான் இவ்வளவு பணம் இருக்கின்றதோ? இல்லா தவர்களுக்கு கொடுத்தால்கூட என்னைப் போன்றவர்கள் வாழலாமே என எண்ணி வெம்பி தவித்தது அவள் மனம்.

யாராவது கதவை தட்ட மாட்டார்களா யாராவது உதவி செய்ய

மாட்டார்களா ஒரு முறை வசதி படைத்த ஹாஜரா தாத்தா தன் பிள்ளை களைக்கு ஆடை வாங்கித் தந்த நினைவு அவளுக்கு வந்தது.

ஆனால் அவர்தான் இப்போது வெளிநாடு சென்று விட்டாரே.. என்ன செய்வதென புரியாமல் அப்படியே தனக்குள் பேசிக் கொண்டி ருக்கையில் யாரோ கதவை தட்டும் சத்தம் கேட்டது.

அல்ஹம்துலில்லாஹ்! யாரோ தனக்கு உதவி செய்யத் தான் வருகிறார்கள் என நினைத்தவள் ஓடிச் சென்று கதவைக் திறக்க அங்கே அவர்களது முன் வீட்டு சகோதரி பாய்ஷா நின்றுகொண்டிருந்தார்.

மனதிலிருந்த எதிர்பார்ப்புகள் எல்லாம் மாயமாய் மறைந்து போக என்னிடம் ஏதாவது உதவி கேட்க வந்திருப்பாரோ எனக் கூட நினைத் தாள் மாஹிரா..

ஏனெனில் அவரும் வறுமைக் கோட்டில் அல்லாடுபவர் தான். மாஹிரா யோசித்துக் கொண்டிருக் கையில் அவள் கைகளில் திணிக்கப் பட்டது சில ஆயிரம் பணத்தாள்கள்..

அதிர்ந்து விழித்தவளை நோக்கிய பாய்ஷா,

"இது என்ட பிள்ளைகளுக்கு உடுப்பு வாங்குவதற்காக எனக்கு தெரிஞ்ச ஒரு ஹாஜியாரோட மனைவி அனுப்பி வைச்சாங்க." என்றார்.

"இதை ஏன் எனக்கு?" விழி கள் கலங்க கேட்ட மாஹிராவிடம்,

"அப்படிக் கேட்காதே.. உன் நிலைமை எனக்கு தெரியும்.. என்னைப் போல் தான் நீயும் கஷ்டப்படுவாய். அவங்க தந்ததுல அரைவாசி பணத்தை எடுத்துக்கொண்டு மீதியை உனக்கு தந்திருக்கேன். நமக்கு இல்லாட்டியும் பிள்ளைகளுக்கு உடுப்புகளை எடுத்துக் குடு. நான் வரேன்."

அமைதியாய் கூறிவிட்டு போன வரை ஓடிச்சென்று கட்டிப் பிடித்து விம்மி அழுதாள் அவள்.

எத்தனையோ பணக்காரர்கள் ஊரில் மிகச் சாதாரணமாய் உலாவித் திரிகையில் இப்படி ஒரு ஏழை தான் இன்னொரு ஏழைக்கு உதவி செய்ய வேண்டுமா?

ஒரு வேளை உணவுக்கே அல்லல் படும் இந்த உலகில் பணத்தைக் கண்டபடி செலவிடுபவர் களை என்னவென்று சொல்வது?

மனதில் இவற்றை நினைத்த படி நின்றவளிடம் ஒன்றை மட்டும் கூறினார் பாய்ஷா.

"நீ விழிப்பதற்கு இதில் எது வுமே இல்லை மா. வரப்போவது ஹஜ் பெருநாள். தியாகங்களை நிரூபிக்கக் கூடிய பெருநாள்.. தியாகங்களுக்கான மொத்தப் படிப்பினைகளையும் கொண்ட பெருநாள்.. அதில் தியாகங்களை செய்யாவிட்டால் இன்னும் எப்போது செய்வது?" கூறிவிட்டு சென்றவரைப் பார்த்து விழி கலங்கியவாறு அல்ஹம்துலில்லாஹ் என்றாள் மாஹிரா..

"பெரு நாளைக்கு உடுப்பு வாங்கித் தருவீங்க தானே?" என்ற அவளது பிள்ளைகளின் முகம் அவளது மனதுக்குள் மெல்லமாய் வந்து மறைந்தது..

# நமக்கான ஆறுதல்

அழும் போதுகண்ணீர் துடைத்திடும் விரல்களும்
சோர்ந்து போகையில் ஆறுதல் தரும் மனதின் வார்த்தைகளும்
தனக்கேதுமாகக் கூடாதென துடித்துக் கொண்டே இருக்கும் இதயமும்
நமக்கான அனைத்தையும் நாமே செய்யக்கூடிய அறிவும்
ஒவ்வொருவருக்கும் இறைவனால் வழங்கப்பட்ட அருட்கொடை

ஆனால்

இந்த இதயம் நமக்காக துடிப்பதை விட பிறருக்காகத்தான்
அதிகம் துடித்துக் கொள்கிறது

இந்தத் தனிமை நம்மைப்பற்றி சிந்திப்பதை விடுத்து
பிறரைப்பற்றித்தான் அதிகம் சிந்தித்துக்கொள்கிறது.

நமக்கான ஆறுதல்கள் அத்தனையும் நம்மிடம் இருந்தும்
நமக்கான ஆறுதலை நாம் பிறரிடம் எதிர்பார்க்கிறோம்

இரவின் நிலவொளியில் ஒளிமயமான எதிர்காலத்தை திட்டமிடலாம்
நட்சத்திரங்களிடம் மனதார பேசிக் கொள்ளலாம்

குழந்தைகளின் புன்னகையில் புது உலகை காணலாம்
மனசாட்சியிடம் நமக்கான அறிவுரைகளை கேட்டுக் கொள்ளலாம்

நமக்கு நாமே சமாதானம் சொல்லிக் கொள்ளலாம்
யாரையும் எதற்கும் தேடாமல் இருக்கலாம்

இப்படி நமக்கான அத்தனையும் நமது சிந்தனையில் இருக்க
எங்கோ நாம் தேடியலைகிறோம்.
நமக்கான ஆறுதல் நம்மைத் தவிர வேறு யாரிடம் இருந்துவிடப் போகிறது

மஜினா
மாவடிப்பள்ளி

# வாழ்த்த வாரீர்

பெரும்பேறாய் தமிழுக்கு இவரும் வாய்த்தார்
பெருமனமோ பொக்கிசமாய் திகழ நின்றேன்
ஊருக்கே நன்மையினை தமிழுக் காக
உண்மையுடன் வந்துதித்த அமினார் செய்தார்

முத்தமிழுக்கே கலசத்தால் சிறப்பு செய்து
முழுமையுடன் அவர்நெஞ்சை மகிழச் செய்து
புதிதாகப் பூத்திலங்கச் செய்த பாவல்
பூதலமே கொண்டாட வாழ்த்த வாரீர்

- வஃபீரா வஃபி

# வலிமையாய் தொடரட்டும்

தமிழ்நெஞ்சம் வளர்க்கும் தகைமை யாளரிடம்
தமிழுக் கில்லையே என்றுமே பஞ்சம்.
வளரும் எழுத்தாளர்கள் இவரிடம் தஞ்சம்.
தமிழ்ப் புலமையோ வானை விஞ்சும்.

பாரினில் இன்னும் பணிகள் புரிய
பாங்காய்த் அவரின் வாழ்க்கையும் விரிய
படைத்தோன் அல்லாஹ் அருட் சொரிய
பதிகிறேன் கவியின்று பிரார்த்தனை புரிய.

வாகையின் கதவுகள் என்றும் திறக்க
வல்லோனின் பரக்கத் நிலைக்க
வாழ்க்கை நலங்களால் செழிக்க
வாழிய அமினார் ஆயுள் சிறக்க.

வாழ்கவே என்றுமே இனிமையாய் நிறைவாய்
எழுக என்றும் அமினார் வலிமையாய்
தொடரட்டும் அவர் புகழ் தூய்மையாய்
வாழ்கவே இறை நேசனாய் நீடு.

மக்கொனையூராள்



அன்பின் சகோதரர் ஆளுமைப் பாவலர்
என்றும் புகழோங்கி ஏற்றமாய் - இன்பமுடன்
தன்னல மின்றித் தமிழ்நெஞ்சம் சேவைகள்
பன்மடங்காய்க் கூடிடும் பார்

– சரஸ்வதி பாஸ்கரன்

# தமிழ் மண் போற்றும் சிகரம்

ஏற்றிவிட்டு அழகுபார்க்கும் குணமதில்
இணையிலா பண்பாளர்
போற்றி மகிழ்தலில் உளம் மகிழும்
உன்னத மாண்பாளர்
தமிழிலக்கியத் தொண்டில் இவர்
தமிழ் மண் போற்றும் சிகரம்
அமுதக் கடலாய் அனைவர் போற்ற
சீராட்டும் தமிழ்ச்சான்றோர் வரிசையில்
பாராட்டுப் பெற்ற பெருமகனார்
தமிழ் நெஞ்சம் அமின் அவர்களுக்கு
தாலாட்டு தின வாழ்த்துகளைத்
தெரிவித்து அகம் மகிழ்வோம் வாருங்கள்!

கா.ந.கல்யாணசுந்தரம்



# வளர்மதியாய் நிறைவான வளங்கள் பெற வாழ்த்துகிறோம்!

ஆனியிலே அவதரித்த அரும்பதத்துத் தமிழொன்றே.!
அழகு சேர்த்து!

நானிலத்தின் கவிஞர்கள் நன்றேதான் முன்னேற.!
நலங்கள் கூட்டி!

ஏணியெனத் தான்நின்றே உயர்வுக்கு வழிகாட்டும்..!
இனிய நெஞ்சம்..!

கேணியென ஊறிநின்று பாலையினை உயிர்ப்போனின்.!
கீர்த்தி வாழ்க!

தூளியினைக் கண்டநாளில் தொட்டதெல்லாம் துலங்கவேண்டும்.!
சுகமே பெற்றுத்

தோளதிலே புகழ்களெல்லாம் சேரவேண்டும் நிறைவாகத்..
தோற்கா அன்பால்..!

ஆளுகின்ற தமிழின்நெஞ் சத்தாரை நினைவினிலே.!
ஆழப் பற்றி..!

நீளுகின்ற நாட்களெல்லாம் பேறாக நினைப்போமே.!
நேசம் கொண்டே !



ஆழியென நட்புண்டு அழகுதமிழ்ச் சொல்லுண்டே..!
அன்னை போல..

நாழிகையும் மாறாத நலன்களையே மறக்காத.
நாட்டம் உண்டு !

மேழியெனத் தமிழுலகை மிளிரச்செய் உயர்தருவே.!
மேன்மை கண்டு.!

வாழியென வாழ்த்துகிறோம் வளர்மதியாய் நிறைவான.
வளங்கள் பெற்றே .!

– பொலிகையூர்க் கோகிலா

# ஆளுமை அறிமுகம்




## தமிழ்நெஞ்சம்

இன்று நாம் அறிமுகப் படுத்தும் ஆளுமை தமிழை நேசித்து சுவாசிக்கும், தமிழ் இலக்கியத் துறையின் வளர்ச்சிக்கு இன்றியமையாத தமிழ்நெஞ்சம் அமின் அவர்களாவர்.

இவர் இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும், கடந்த நாற்பத் தைந்து வருடங்களுக்கும் மேலாக பிரான்ஸ் நாட்டை வாழ்விடமாகக் கொண்டவர்.

சிறுவயது முதலே தான் கொண்ட தமிழார்வம் காரணமாக தமிழுக் காகவே தன்னை அர்ப்பணித்து சேவைகள் செய்து வருபவர். தம் எட்டு வயதிலேயே 'சுண்டல்' எனும் கையேட்டுப் பத்திரிகையை நடத்தியபெருமையும் இவருக்குண்டு.

தமிழ்நெஞ்சம் இதழை கடந்த ஐம்பத்தோரு ஆண்டுகளாகத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தி வரும் சாதனையாளர். இவருக்கு சமீபத்தில் சென்ற மாதம் தஞ்சைத் தமிழ் மன்றம் வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கி சிறப்பித்தது. தமிழ்நெஞ்சம் அமின் வெளிநாட்டில் வசித்தாலும், தாய்த்தமிழைத் உயிருக்கு நிகராக உணர்வில் சுமந்து தொண்டுகள் செய்து வருகிறார்.

பல நூல்களை எழுதி வெளியிட்ட இவர் புகழை விரும்பாத தன்னடக்கம் மிக்க பொதுநலத் தொண்டன் என்றால் அது மிகையில்லை.

இவரின் முதல் நூல் (1968) 'பாழடைந்த பங்களா' எனும் திகில் நாவலாகும். உறவுகள், கருணை, நியாயங்கள் இப்படியாக கதைகளும், கவிதைகளும் எழுதி இவர் அண்மையில் எழுதி வெளியீடு கண்ட 'தோழர் சிங்காரவேலர்' எனும் நூல் தென்னிந்தியாவில் 1860 களில் பிறந்த, முதல் கம்யூனிஸ்ட் சிந்தனைச் சிற்பியான சிங்காரவேலரைப் பற்றி சமூகத்துக்குத் தெரியாத பல விடயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது என்பதும், அதிக அளவில் இந்நூல் விற்பனையாகி

யுள்ளன என்பதும் மேலதிகத் தகவலாகும்.

இன்றைய ஆளுமை, பத்திரிகைத் துறை, ஓவியங்கள் வரைதல், இதழ்கள் நூல்கள் வடிவமைப்புச் செய்தல், கவிதை எழுதுதல், நாடகம், நடிப்பு, கணிணி சம்பந்தமான ஆற்றல் வெப் மாஸ்டர், இப்படி பன்முகத் திறமைகள் கொண்டவராய் திகழ்பவர்.

பத்திரிகைத்துறையில் பழுத்த அனுபவ சாலியான இவர், இலங்கை, இந்தியா, ஐரோப்பிய நாடுகளில் வெளி வரும் பல இதழ்களின் வெற்றிக்குப் பின்னணியாக இருந்து ஊக்கம் கொடுப்பவர். எமது முத்தமிழ் கலசம் இதழுக்கும் கௌரவ ஆசிரியராக இருந்து, ஆக்கங்களை நெறிப்படுத்தி அழகிய முறையில் வடிவமைப்பு செய்து தருவதுடன் இதழின் முன்னேற்றத்துக்கு பக்க பலமாக இருந்தும் வருபவர்.



படங்கள் :
முப்பெரும்விழா சென்னை

பல நூலாசிரியர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்து, ஏறத்தாழ ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்களை வடிவமைத்து, அவை வெளியீடு



காணவும் வழியமைத்துக் கொடுத்திருப்பதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இவர் பெற்ற விருதுகளும் சான்றிதழ்களும் எண்ணிலடங்காதவை. அவற்றுள் கவிமுகில், கவிவாணன் கம்பன் விருது, சென்ற மாதத்தில் இலுப்பை அறக்கட்டளை சார்பில் தமிழ்அரிமா மற்றும் இன்னபிற ஏராளமான விருதுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

வயது வித்தியாசமின்றி பாரபட்சம் பாராமல், அனைவரிடமும் நட்பு பாராட்டி இனிமையாகப் பழகும் இயல்புடைய தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் எப்போதும் நேர்மறையான சிந்தனைகளுடன் சுறுசுறுப்பாக இயங்கி வருபவர். இவரின் சேவை என்றும் தமிழுக்குத் தேவை. இவரை முத்தமிழ் கலசம் சார்பாக மனமார வாழ்த்துகிறோம்.






# கனித்தமிழ் இனித்திடும்

விளம் மா விளம் மா
விளம் விளம் மா

1.

தமிழது நெஞ்சம் தமிழினம் பாடி
தமிழிதழ் வளர்த்திடும் நாளும்
குமிழெனத் தோன்றும் கவிதைகள் கதையும்
குவிந்திடும் கூறிடும் செய்தி
அமிழ்தென உண்டு அடுத்தது நோக்கும்
அமினவர் தொண்டுகள் வாழ்க
நமையுமே எழுத வைத்திடும் வாழ்வின்
நன்மைகள் தீமைகள் உரைக்கும்

2.

கவிஞரைப் பாட வைத்திடும் பாங்கு
களித்திடத் துள்ளவும் செய்யும்
தவிரவும் வானாய் உயரவும் வைக்கும்
தனித்திடும் புதுமையும் காணும்
கவர்ந்திடும் கமழும் தமிழென மணமும்
கலங்கரை விளக்கென வீசும்
கவிகளை வளர்க்கும் பெருக்கிடும் திறமை
கனித்தமிழ் இனித்திடும் பேசும்


**கவியரசி தென்றல்கவி,**
பட்டுக்கோட்டை, தமிழ்நாடு

## வியனுல கதனில் வாழ்க

உயர்வுறு தமிழால் எங்கள்
உறவென நாங்கள் போற்ற
அயர்விலாத் தமிழ்த் தொண்டாலே
யாவர் தம்உளமும் போற்ற
நயமுறு புலவர் தங்கள்
நட்பென வாழ்த்திப் போற்ற
வியனுல கதனில் வாழ்க
வாழ்கென வேண்டுகின்றோம்

அமின் என்றால் உழைப்பாம் அன்பர்
அமின் என்றால் ஆர்வலர்தாம்
அமின் என்றால் சான்றாண்மைதாம்
அமின் வாழ்க நீடு வாழ்க

**அன்புவல்லி தங்கவேலனார்**





## தன்னிகரில்லாத் தமிழ்மகனுக்கு...

நிலவில் ஒளி கறந்து,
வானவில் வண்ணம் கலந்து,
பூக்களின் நறுமணம் பிழிந்து,
ஆழியின் நீலம் எடுத்து,
தென்றலின் சுகம் தொட்டு,
பனித்துளியில் தூரிகை அமைத்து,
வாழ்த்தொன்று வரைந்து,
தமிழ்த்தாய் ஈன்றெடுத்த..
இணையற்ற கவிப் பெட்டகமாம்...
'தமிழ்நெஞ்சம்'
எனும் தன்னிகரில்லாத்
தமிழ்மகனுக்கு, அகவை தின
வாழ்த்துக்களாய் சமர்ப்பணம்

நிஷா ரஹ்மான்

## இலக்கியப் பாலமாக இலங்கிடும் நெஞ்சம் வாழ்க!

அமிழ்தினும் இனிய தாக
அகத்தினில் நிறைந்த தாக
தமிழினை மதித்து வாழும்
தமிழ்மகன் அமினார் வாழ்க!
அமிழ்தமாய், அழகாய் இங்கே
அரைநூற் றாண்டு காலம்
தமிழிதழ் திங்கள் தோறும்
தருமிவர் சேவை வாழ்க!


உலகெலாம் போற்றும் வண்ணம்
உன்னதப் பணிகள் செய்து
இலக்கியப் பால மாக
இலங்கிடும் நெஞ்சம் வாழ்க!
பழசொடும் புதுமை சேர்த்துப்
படைத்திடும் இதழ்க ளாலே
உளமெலாம் நிறைந்து நிற்கும்
உயர்திரு நெஞ்சம் வாழ்க!

பற்பல நூல்கள் யாத்துப்
படைத்திடும் நேசன் வாழ்க!
நுட்பமாய் வடிவ மைத்து
நூதனப் பணிகள் செய்து
செப்பமாய்.. இதழ்கள் செய்வோர்
சிறந்திட வழிகள் செய்யும்
அற்புதக் கலைஞன் வாழ்க!
அமினெனும் நாமம் வாழ்க!

விருதுகள் பலவும் பெற்ற
வித்தகன் சிறந்து வாழ்க!
அருங்கவி,'தமிழின் செம்மல்'
அன்பினைச் சொரியும் நெஞ்சம்
புரவலன்,அமினார் என்றும்
புகழொடு வாழ்க! வாழ்க!
பிறந்தநாள் வாழ்த்துச் சொன்னோம்
பெருமகன் வாழ்க! வாழ்க!

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

# தமிழ்நெஞ்சம் அமின்





ஓலை சுமந்தமொழி
ஓங்குகடல் உண்டமொழி
வேலை நிகர்த்தமொழி
வெள்ளோலை மீதேற

ஆழ்கடலைத் தாண்டி
அமினென்னும் ஆளுமையின்
வாழ்விடத்தைச் சென்றடைந்து
வார்த்தை வரிசைகட்டிப்

பாவலர்கள் நாளும்
பகர்கின்ற சொற்களெல்லாம்
ஆவலுடன் கட்டி
அவரிடத்தில் சேர்த்துவிட்டுக்

கண்ணா யிரங்கோடி
கண்டு படிப்பதற்கு
எண்ணாமல் ஏதும்
இகழாமல் நூலாக்கிப்

பாட்டுங் கதையும்
படிப்பதற்குக் கட்டுரையும்
ஏட்டுக்குள் அச்சிட்டு
எழிலான வண்ணமிட்டு

வாசிக்கத் தாரும்
வளர்பிறையாம் செந்தமிழை
நேசிக்கும் பொன்னின்
நிறைகுடமாம் அன்பருடன்

சேர்ந்து பழகிவிட்டால்
சீச்சீ மதுக்கசக்கும்
ஓர்ந்து நெருங்கிவிட்டால்
உள்ளமெல்லாம் பூப்பூக்கும்

சேவை மனத்தவராம்
செம்பொன்னாய்த் தூயவராம்
யாவையுமே அன்பால்
இறுக இணைப்பவராம்

பேச்சில் இனியவராம்
பேனா பிடிப்பவராம்
மூச்செல்லாஞ் செந்தமிழால்
முற்றும் நிறைந்தவராம்

சிந்தைக் கலையார்வம்
சேர்ந்தவராம் அக்கலையை
வந்து கணினிக்குள்
வார்த்தெடுக்கும் வல்லவராம்

கற்பனையில் வீசுகின்ற
காற்றிவராம் வாசகர்க்கு
நற்கவிதை நூலாய்
நயமாக ஈபவராம்

இல்லாரைக் கண்டால்
இருகண் வடிப்பவராம்
பொல்லாரைக் கண்டுவிட்டால்
போயொதுங்கிச் செல்பவராம்

நல்லார்முன் மட்டும்
நகைப்பவராம் செல்லாதச்
சில்லறைக்கு முன்னே
சினத்தை உமிழ்பவராம்

உள்ளேதும் வைக்கா(து)
உரைக்கின்ற சேயிவராம்
எள்ளளவும் கள்ளங்கள்
இல்லாதத் தாயிவராம்

பொய்யில்லா நேசப்
புனலிவராம் நட்பென்றால்
மெய்யில் படகாய்
. மிதப்பவராம் ஐயமில்லா

ஊற்றிவராம் வீசும்
ஒளியிவராம் வாய்ப்பசிக்கோ
நாற்றிவராம் பாரி
நகலிவராம் இம்மண்ணில்

நல்லறிவு கல்வி
நலமான ஆயுளையும்
வெல்லுகின்ற ஆற்றல்
வெடிபோல் இளமையையும்

சிங்கத் துணிவினையும்
செப்பும் பெருமையையும்
தங்குகின்ற பொன்னோடுத்
தக்க பொருளினையும்

ஏற்கும் புகழினையும்
ஈயும் நிலத்தினையும்
போற்றும் படிசூழ்ந்தப்
பொன்றாநல் மக்களையும்

நல்லொழுக்கத் தோடிங்கு
நாளும்நோய் இன்மையையும்
செல்கின்ற பாதை
சிறப்பாய் அமைவதற்கு

வேண்டும் முயற்சியையும்
வெற்றியையும் தப்பாமல்
யாண்டும் இவர்க்களித்து
இன்பில் திளைக்கவிட்டு

நானிலத்துச் செம்மொழியும்
நாளுமிவ ரோடிருக்க
வானிறைவா தந்தருள
வா.

**வெண்பா வேந்தர் ஏடி. வரதராசன்**





# வாழ்த்துப்பா..

நெஞ்சே நெஞ்சே.. தமிழ் நெஞ்சே..
வாஞ்சை நிறை தமிழ் நெஞ்சே..
கஞ்சமில்லா குணமுடை நெஞ்சே நெஞ்சே..
பஞ்சமில்லா திறனுடை நெஞ்சே நெஞ்சே..

ஓய்வறியா ஆதவன் எங்கள் அமின்..
தமிழ்க் கடலில் முத்துக் குளித்தவரே
ஒப்பற்ற பண்புகளுடை தலைவனே..
இலக்கிய உலகில் ஓயாத தமிழலையே.. .

எண்ணற்ற படைப்பாளர்களின் ஏணிப்படியே..
தமிழ்ப் பணிகள் அனைத்தும் உடமக்கு அத்துப்படியே..
உதவும் நற்குணம் படைத்தவரே..
ஊர் போற்ற வாழும் உத்தமரே..

பன்முகத் திறமையுடை பல்கலைக்கழகமே..
பல்சுவை இதழ் நடத்தும் பகுத்தறிவாளரே..
பிரான்சிலும் தமிழ் மணக்கும் தமிழ் நெஞ்சமே..
பல்லாண்டு பல்லாண்டு காலம் நீவிர் நலமுடன்...
வளமுடன் வாழிய வாழியவே ..
பணிவன்புடன் போற்றி வணங்குகிறேன்
பண்பானவரே..

இனிய அகவைத் திருநாள் வாழ்த்துகள்
தமிழுள்ளவரை அமினார் புகழ் வாழ்க..

வணங்கி வாழ்த்தி மகிழும்..

**சாரதா க. சந்தோஷ்**
ஐதராபாத்

## அகவைத்திருநாள் காணும் அமின் அவர்களே வாழ்க!

என்னரும் தமிழின் வேதம்
இலக்கியத் தீரா தாகம்
இன்னரும் பிறப்பு கண்ட
எங்கள் தமிழ் நெஞ்சம்
பன்னரும் பணியில் தன்னை
பகுத்துமே தந்த நண்பர்
தென்னரின் புகழு யர்த்த
தீந்தமிழ் ஆளும் அமின்!

கொடையே கொண்ட கொள்கை
கொடுப்பதில் பேதம் பாரார்
கடைதனு முள்ளோர் மேலை
கண்டிட ஏற்றும் ஏணி
படைதனும் இவருக் குண்டு
பைந்தமிழ் வீரர் பலரும்
நடைதனில் எளிமை ஆயும்
நட்பதில் பெரிய வேந்தே!

அதிசயம் பலரும் சொல்வார்
அகிலத்தில் ஏழு என்றே
அதிகமாய் ஒன்றைச் சொல்வேன்
அமினைத் தொட்டுக் காட்டி
பதிகமே பாடின் கூட
பகுதியே சொல்லக் கூடும்
அதிகமாய் சொல்ல எந்தன்
ஆயுளும் போதா தன்றோ!

பிறப்பரும் நாளில் இந்த
பிறைதனைப் போற்றிப் பாட
சிறப்புறு சொற்கள் பஞ்சம்
சிறியவன் வாழ்த்து கின்றேன்
அறப்பணி செய்யும் நட்பே
அறுநூறு ஆண்டு வாழ்க!
உருப் பெறும் சரித்திரத்தில்
உன்புகழ் ஓங்கும் ஓங்கும்!



**பொன்மணிதாசன்**

# தீந்தமிழால் வாழ்த்துகிறேன்

நெஞ்சகத்து நறுந்தேனே,
நிறை தமிழின் வளர்மொழியே
எதுகையோடு மோனையும்
சீர்த்தமிழ்ப் பண்ணிசைக்க
குறிலோடு நெடிலும்
பூச்சொரிந்து மகிழ
அசைகளின் தாலாட்டு
தளை தட்டா இசைபாடிட

எழுந்து வந்த தமிழன்னையும்
புத்துணர்ச்சி பெற்றிடவே
தவழ்ந்து வந்த நின்னைத்
தன் மடி தாங்கினாளோ...

புதுவை மண் தின்று
புத்தெழில் பெற்றாயோ
பிரான்ஸ் மண் மணக்க
தழைத்தூன்றி நின்றாயோ ...

படைப்பாளர்களின் திறன்களை
நெஞ்சத்தில் நிறைத்தாயோ
அணி, அணியாய் தமிழ்நெஞ்சத்தில்
வலம் வரச் செய்தாயோ.

செந்தமிழ் இலக்கியமெல்லாம்
நீ என் சொந்தமெனப் பூச்சொரிய
விண்ணகத்தோர் வாழ்த்த
புவிமகள் சிலிர்த்திட
பிறந்திட்ட மாமகன் நீயே...

தமிழ்த்திரு. தமிழ்நெஞ்சம் அமின்
ஐயா அவர்களை
தீந்தமிழால் வாழ்த்துகிறேன்
வாழ்க வளத்துடனே



அன்புச்செல்வி சுப்புராஜூ

# ஏற்றமுற வாழ்க! வாழ்க!!

நெஞ்சத்தைத் தமிழுக்கே
தஞ்சமெனத் தந்தவராம்.
கிஞ்சித்தும் தடையின்றி
அஞ்சாமல் நிமிர்ந்தவராம்.

ஓடுகின்ற நதியினிலே
தத்தளிக்கும் படகினுக்கே
ஒளியூட்டி வழிகாட்டும்
கலங்கரை விளக்கமதாம்.

தமிழ்த் தாகம் தீர்த்திடவே
தரணியிலே வந்துதித்த
அள்ள அள்ளக் குறையாத
அற்புத தமிழூற்றாம்.

அகவை அறுபத்தொன்பதில்
அற்புத தோழமையாய்
அகத்தினிலே நிறைந்து நிற்கும்
அறிவார்ந்த நட்பதுவாம்.

தமிழ் நெஞ்சம் மகுடத்தை
தனித்துவமாய் சிரமேற்று
எம் நெஞ்சம் நிறைத்திட்ட
தமிழ் நெஞ்சம் வாழியவே !

இன்றுபோல் என்றென்றும்
நல் வாழ்வு சிறக்கட்டும்.
இன்னும் பல்லாண்டு
ஏற்றமுடன் வாழியவே!!



மணிக்கூ கவி ஹாஜியானி
**செய்னுலாப்தீன் நஸீரா**
ஏறாவூர், இலங்கை

# தமிழ்நெஞ்சம் அமினார் வாழி

குயிலாசான் பணிபுரிந்த நிரவி தோன்றி
கோலோச்சப் பிரெஞ்சுநாடு சென்ற தோழர்
ஒயிலாகத் தமிழ்ப்பெண்ணை நடக்கச் செய்து
ஒப்பில்லா மின்னிதழில் மிளிரச் செய்து
பயிலாத மாந்தரையும் படிக்கச் செய்யும்
பண்பாளர் தமிழ்நெஞ்சம் அமினார் வாழி
அயராத நல்லுழைப்பால் அகில மெங்கும்
அசத்துகின்ற நட்புறவே வாழி வாழி

இதழ்உரைக்கும் வார்த்தைகளை எல்லோ ராலும்
இயலாது காப்பாற்ற அறிவோம் நாமே
இதழ்ஒன்றாய்ச் செயல்ஒன்றாய் வெவ்வேறாக
இருப்பதுவே மனிதகுலச் செயலானாலும்
இதழ்சொட்டும் சொற்களையே வேத வாக்காய்
இருப்பவர்நம் தமிழ்நெஞ்சம் தமிழுக் காக
இதழ்ஒன்றை உயிர்மூச்சாய் ஐம்ப தாண்டாய்
இடைவிடாது நடத்திவரும் தோழர் வாழி!

தற்பெருமை பாடிவரும் இதழ்கள் உண்டு
தருக்கமெலாம் செய்துவரும் இதழ்கள் உண்டு
சொற்குவியல் கொண்டலரும் இதழ்கள் உண்டு
சோற்றுக்கு நடைபயிலும் நூல்கள் உண்டு
அற்பகுணங் கொண்டவரின் இதழ்கள் உண்டு
அருந்தமிழர்ப் பைசுரண்டும் இதழ்கள் உண்டு
கற்பெனவே பிறர்நலத்தைப் பேணும் நூலாய்க்
கலியுகத்தில் தமிழ்நெஞ்சம் போலிங் கேது?

உலகுக்குத் தெரியாத கவிஞர் கண்டே
உளமாற அவரிடத்தும் பேட்டி கண்டு
திலகமென அட்டையிலே அவரை ஏற்றித்
திறமுடனே வலம்வருமே தமிழர் நெஞ்சம்!
நலமுடனே படைப்பாளி நட்பைப் பேணி
நயமுடனே அவர்படைப்பை இதழில் இட்டுக்
குலம்காக்கும் இறையாகத் தமிழைக் காக்கும்
குணக்கோமான் தமிழ்நெஞ்சம் அமினார் வாழி

சிறுகவிதை பெருங்கவிதை எதுவா னாலும்
சீர்திருத்தும் கவிக்கோலாய் அதனை மாற்றி
நறுங்கவிதை ஆக்கிநமை மகிழ்விப் பாரே
நாட்டோரும் நமைப்போற்றச் செய்வார் நம்மின்
சிறுகதையை கட்டுரையை சிறப்பிப் பாரே
செழும்படைப்பாய் அதைமாற்றி அழகைக் கூட்டும்
இறுமாப்பே ஏதுமிலாத் தமிழின் தூதர்
எந்நாளும் தமிழ் நெஞ்சம் அமினார் வாழி!

மண்துஞ்சா வண்ணமதில் மழைபெய்தாலும்
மழைதுஞ்ச நாம்விரும்பி மகிழ்வ தில்லை
பெண்துஞ்சாப் பேரழகாய்த் தமிழைக் காத்துப்
பெருமையெலாம் ஈட்டிநின்று கடியா ரம்போல்
கண்துஞ்சாப் பேருழைப்பைக் கணக்கே இன்றி
கனித்தமிழின் வளர்ச்சிக்காய்க் கொடுக்கும் வேந்தர்
பண்துஞ்சாத் தமிழ்ப்பாட்டின் ஓசை போலப்
பண்பாட்டுப் பெருந்தூதர் அமினார் வாழி

**இராம வேல்முருகன்**
**வலங்கைமான்**



# வாழ்த்திட வந்தோம் உளம் கனிந்து

தெள்ளிய தமிழில் தேனாய் அருவி
அள்ளிய மொழியில் அழகு பெருக்கி
கொள்ளை இன்பம் கொழிக்கும் பொருளில்
கிள்ளை போலே தந்திடும் பாணி


அன்பில் அவர் அணையா விளக்கு
பண்பினிலே பார் போற்றும் சிறப்பு
கண்களில் பொருந்திட்ட கருணைத் துளிகள்
எண்ணம் எல்லாம் உறுதியின் தொனிகள்

தமிழ்த் தொண்டு தரணியில் ஆற்றும்
தமிழ் நெஞ்சம் அமின் ஐயாவுக்கு
அகவை தினவாழ்த்து அலை கடலாய்
அளித்திட வந்தோம் உளம் கனிந்து

வாழிய வாழியவே அவர் தமிழ்ப்பணி
வளர்க வளர்கவே அமினாரின் கவிச்சேவை
வானமளக்கும் புகழ்மாலை
வாழையடி வாழையாய்த் தழைக்குமே




## DR. ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை




# அரும்புகளின் ஊர்வலம் அறிமுகம்

46 கவிஞர்கள் ஒன்றிணைந்து எழுதிய தன்முனைக் கவிதைகளின் தொகுப்பான அரும்புகளின் ஊர்வலம் எனும் அழகான நூல் வெளிவந்திருக்கிறது. 'நானிலு' எனும் கவி வடிவத்தைத் தெலுங்கிலிருந்து தமிழுக்குக் கொண்டு வந்து தன்முனைக் கவிதைகளாக எம்மிடம் சேர்த்த தன்முனைக் கவிதைகளின் தந்தையென போற்றப்படும் கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் ஐயா அவர்கள் இந்நூலின் தொகுப்பாசிரியராகத் திகழ்கிறார்.

212 பக்கங்களுடன் அருமையான அரும்புகளின் ஊர்வலம் தன் பயணத்தை ஆரம்பித்திருக்கிறது. திரைப்பட இயக்குனர் ராசி அழகப்பன் எழுதிய அணிந்துரை இந்நூலின் அழகுக்கு அணி சேர்க்க, இந்நூலை குழந்தை இலக்கிய முன்னோடி கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்களுக்கு சமர்ப்பணமாக்கியிருக்கிறார்கள் சென்னை தன்முனைக் கவிதைகள் குழும நிர்வாகிகள்.

நிவேதிதா பதிப்பகத்தின் வெளியீடாக வந்திருக்கும் இந்நூல் அனைத்து இல்லங்களிலும் ஆவணமாகக் களஞ்சியப் படுத்த வேண்டிய அற்புதமான ஒரு நூலாகும்.

இதில் அனைத்து கவிதைகளுமே தனிச்சிறப்பு வாய்ந்தவை, தமிழ் இலக்கிய உலகில் வெற்றித்தடம் பதித்து சரித்திரம் படைக்கக் கூடியவை என்று ஆணித்தரமாக சொல்லலாம்.

இதன் விலை 150 / - இந்திய ரூபாய்
நூல் தேவைகளுக்கு :
89393 87296 /76



# அழிந்து போன ஒரு ஏரியின் அழுகை

இளங்கோ திகா

*1960 களில் அந்த கடலில் ஆண்டுக்கு 40 ஆயிரம் டன்கள் மீன்களை அள்ளி எடுத்தார்கள். அப்படிப்பட்ட நீர் பரப்பு வற்றிப் போனது ஏன்? உலகம் வெப்பம் அடைந்தது தான் அதற்கு உண்மையான காரணமா? என்றால் அதுவும் இல்லை. பின் என்னதான் காரணமாக இருக்க முடியும் ? கடல் வற்றி விட்டதா ?*

*சுமார் 50 வருடங்களுக்கு முன்னால் மிச்சிகன் ஏரியை விடவும் நீர் பரப்பில் பெரிதாக இருந்தத அந்த ஏரி, உலகத்தின் நான்காவது மிகப்பெரிய ஏரியாக இருந்தது. ஏரி என்பதை விடவும் அதனை கடல் என்று சொல்லலாம். அந்த அளவு விரிந்து பரந்து. தாஷ்கண்ட் நகரத்தில் இருந்து 400 மைல்கள் தொலைவில் அமைந்திருந்தது. இது கசகஸ்தான் - உஸ்பெகிஸ்தான் இடையே அமைந்த நிலத்தால் சூழப்பட்ட ஒரு கடலாகும்.*

*அமுதர்யா, சைதர்யா (ஆமு தாரியா - சிர் தாரியா) எனும் இரண்டு ஆறுகள். ஆஃப்கனிஸ்தான், தஜ்கிஸ்தான் மற்றும் க்ரிகிஸ்தான் மலைத் தொடர்களில் உருவாகி ஓடி வளம் கொடுத்து இந்த ஏரியில் சங்கமித்தன.*

*நிலப்பரப்பிற்குள் பெரிய தண்ணீர் தீவு போல இருந்ததாலோ என்னவோ இதனை ஏரல் கடல் என*

அழைத்தனர் (அவர்கள் மொழியில் ஏரல் = தீவு ).

1100 குட்டித்தீவுகள் இதனுள் இருந்தன அப்போது இதன் பரப்பளவு 68000 சதுர கிலோமீட்டர்கள்.

இந்த சமயத்தில் தான், சோவியத்தின் பொருளாதார வல்லுநர்கள் ஒரு முடிவெடுத்தனர். அதாவது...

மத்திய ஆசியாவின் வரண்ட நிலப் பரப்பை வளமாக்க வேண்டுமானால் அந்த பகுதியில் பருத்தி செடிகளை விளைவித்து பசுமையை வரவழைத்து பஞ்சத்தை பஞ்சாக பறக்க வைத்து விடலாம் என்ற அபார முடிவெடுத்தனர். ஆனால் அதை செயல் படுத்திய விதத்தில் சொதப்பி விட்டனர். அமோக விளைச்சலை கொண்டு வர அதிக அளவில் வேதியல் மற்றும் உரங்களை பயன் படுத்தினர். மேற்சொன்ன இரண்டு ஆறுகளின் நீர் வளத்தை இதற்காக திருப்பி விட்டனர்.. இத்துடன் ஆயுதப் பரிசோதனை, தொழிற்சாலைக் கழிவுகள் என்பனவற்றாலும் ஏரி மாசடைந்து நீர் வரத்து குறையத் தொடங்கியது. 1960 ல் 4 மில்லியன் பாசனப் பரப்பு 1980 ல் இரண்டு மடங்காக அதிகரித்தது. ஆறுகளின் 90 சதவீத தண்ணீர் பருத்திப்பயிர் விளைவிப்பதற்காக உபயோகிக்கப் பட்டன.

1970 ல் நீர் மட்டமாக 6 அடிகள் குறைந்தது. மட்டம் குறைய குறைய நீரின் உப்பளவு அதிகமானது. அத்தோடு இருந்தால் கூட ஏரல் ஒருவேளை பிழைத்திருக்கலாம். ஆனால் வேதியல் கழிவுகளை முழுக்க முழுக்க ஏரலில் கொட்டினர்.

ஒரு சில மீன் இனங்கள் மட்டுமே ஏரலில் தாக்கு பிடித்த நிலையில் 80 களின் ஆரம்பத்தில் சுத்தமாக அழிந்து போய்விட்டன. மீன் வளம் மட்டுமல்ல அதை சார்ந்து வாழ்ந்த பறவை இனங்களும் விலங்கி னங்களும் காணாமல் போயின.

இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லர் படைகளை எதிர்ப்பதற்காக பெரிய பெரிய போர் கப்பல்கள் இந்த ஏரலில் நங்கூர மிடப் பட்டிருந்தன. அவைகள் மெல்ல மெல்ல தரை தட்டி மண்ணுக்குள் புதைந்தன.

1991ல் சோவியத் யூனியன் பிளவுபட்ட போது உஸ்பெகிஸ்தான், கஸகஸ்தான் கைகளுக்குள் வந்தது ஏரல். ஆனாலும் அவை சோவியத்தின் விவசாய ஃபார்முலாவை விடாமல் பின்பற்றி ஏரலுக்கு சாவு மணி அடித்தன. இதன் மொத்த நீர் பரப்பானது பத்தில் ஒன்றாக சுருங்கிப் போனது.

தண்ணீர் பரப்பு குறையக் குறைய அதன் அடிவண்டலில் தடிமனாக படிந்து இருந்த வேதிப் படிமங்கள் சுழற்காற்றில் சுழன்று, சுழன்று அப் பகுதியை முழுக்க, முழுக்க புழுதிக் காடாக மாற்றியது. இதன் பாதிப் பினால் 10 க்கு 1 குழந்தை ஒரு வயதுக்கு முன்னால் மரணித்துப் போனது.

ஆரோக்கியமான சூழ்நிலையில் இருந்த பகுதியை பேராசையாலும் தவறான திட்டங்களாலும் மிதமிஞ்சிய வேதி உரங்களாலும் ”பிசாசுப் பகுதி“ ஆக மாற்றிவிட்டான் மனிதன்.

பின் எப்போதும் மீட்டெடுக்க முடியாத அதல பாதாளத்தில் புதைந்து போனது ஏரல் கடல்.

# சுதந்திர புருஷர்கள்

அவர்கள் பிறந்த மண்ணில்
இவர்கள் இருக்கக்கூடாது.
அவர்கள் தவழ்ந்த மண்ணில்
இவர்கள் உலவக்கூடாது.
அவர்கள் மிதித்த பாதையை
இவர்கள் மிதிக்கக்கூடாது.
அவர்களை மதித்த மனதினால்
இவர்களை மதிக்கவே கூடாது.
அவர்கள் பேசிய மேடையில்
இவர்கள் பேசவே கூடாது.
அவர்கள் பெயரை உச்சரித்து
இவர்கள் வாக்கு சேர்க்கக்கூடாது.

அவர்கள் நேசித்த மக்களை
இவர்கள் நேசிக்க மறுக்கிறார்கள்.
அவர்கள் சுவாசித்த காற்றிலே
இவர்கள் கந்தகம் கலக்கிறார்கள்.
அவர்கள் ஸ்பரிசித்த மண்ணிற்கு
இவர்கள் குந்தகம் செய்கிறார்கள்.

அவர்கள் சுதந்திர புருஷர்கள்
இவர்களோ தந்திர புருஷர்கள்.
அவர்கள் மக்கள் மனம்தனை
வென்றவர்கள்
இவர்கள் மக்களின் பணம்தனை
வென்றவர்கள்.
இவர்கள் மக்களின் பணம்தனை
தின்றவர்கள்.
அவர்கள் போலே இவர்கள்
நடித்தால்
அவர்கள் என்று ஆகிவிடாது
அவர்கள் எங்கள் தமிழின் மறவர்.
இவர்கள் தமிழையும் தமிழனையும்
விற்கும் குறவர்.

- திருமதி.றீற்றா இராசலிங்கம்.
உடுவில்.

# காற்று வெளியிடைக் கண்ணம்மா

காற்று வெளியிடைக்
கண்ணம்மா உன்னிடம்
காதலைச் சொல்ல
வந்தேன் பொன்னம்மா

மேகத்திடை வெண்ணிலவாய்
எட்டிப் பார்க்கிறாய்
மேனி முழுதும்
மென்மைதனைப்
போர்த்துகிறாய்

காலைக் கதிரெனவே
கண்களில் வீழ்ந்தாய்
கயல் விழியால்
இதயத்தைக் கொய்தாய்

தென்றல் எல்லாம்
தேவியின் சுகந்தமே
தேடியே ஏங்குது
எந்தன் மனமே

மலர் முகம்
காணவே மயங்கினேன்
மடியினில் தூங்கிடக்
கனாக் காண்கிறேன்

மோகப் பார்வை
சொல்லுதே காதை
மௌன மொழியால்
தருகிறாள் போதை

Dr **ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

## தெரிந்து கொள்வோம்

# சின்னச் சின்ன தகவல்கள்

### இளங்கோ திகா

1. மலைப்பாம்பு உயிரினங்களை உண்ணும் சமயத்தில் இறகு, முடி தவிர மற்ற அனைத்தையும் ஜீரணித்து விடுமாம்.
2. 200 கோடி பேருக்கு ஒருவர் தான் 116 வயதைக் கடந்து வாழ்கிறார்களாம்.
3. நத்தைகள் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் வரை தூங்கக் கூடியதாம்.
4. மானின் கொம்புகள் ஆண்டுக்கு ஒருமுறை விழுந்து முளைக்கிறது.
5. நாய் மகிழ்ச்சியில் வால் ஆட்டும். பூனையோ கோபம் வந்தால் தான் வாலை ஆட்டுமாம்.
6. நீர் யானைக்குக் கோபம் வந்தால் கொட்டாவி விடும்.
7. 7. ஆமையின் மூளையை எடுத்து விட்டாலும் அது உயிருடன் இருக்குமாம்.
8. வண்ணத்துப் பூச்சிகள் தன் பின்னங்கால்களால் தான் சுவையை அறிகின்றன.
9. மனிதனுக்கு இணையான அறிவாற்றல் டால்பினுக்கு உண்டு.
10. கோழி முட்டையின் ஓட்டில் சுவாசிப்பதற்கு எட்டாயிரம் நுண் துளைகள் இருக்கின்றன.
11. ஆந்தையால் ஒரே நேரத்தில் இரு கண்களாலும் இருவேறு காட்சிகளைக் காண முடியும்.
12. பெண் சிலந்திப் பூச்சிகள் ஆண் சிலந்தியுடனான உறவுக்குப் பின் அதைக் கொன்று விடுகின்றன.
13. நண்டுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சட்டையை (மேல்தோல்) உரிக்கின்றன.
14. 14. ஒரு ஜோடி எலி ஒரே ஆண்டில் 800 குட்டிகள் வரை போட்டு விடுமாம்.
15. ஒரு பட்டுப்புழுவின் கூட்டில் 32 ஆயிரத்து 500 கெஜம் நூல் இருக்குமாம்.
16. ஒரு சிலந்தி ஒரு மணி நேரத்தில் சுமார் 450 அடி நீளம் கொண்ட வலையைப் பின்னுகிறது.
17. புழுவை இரண்டாகத் துண்டித்துப் போட்டாலும் அது சாகாது.
18. சூரியனுடைய ஒளியில் முப்பதினாயிரத்தில் ஒரு பகுதி தான் சந்திரனின் ஒளி.
19. 19. நம் நாட்டில் மட்டுமல்ல, சீனாவிலும் விதவைகளுக்கு வெள்ளை உடை தான்.
20. ஒவ்வொரு வகை சிலந்தியும்

ஒவ்வொரு வகை வலை பின்னும்.

21. வித்தை காட்ட பயன்படும் குரங்குக்கு ‘பரட்டைத் தலை குரங்கு’ என்று பெயர்.

22. ஒரு யுகம் என்பது 43, 20, 000 ஆண்டுகளாகும்.

23. வளர்பிறை கோடுகள் மேல் நோக்கியும், தேய்பிறை கோடுகள் கீழ்நோக்கியும் இருக்கும்.

24. கண்ணீர்புகை குண்டு, குதிரைக்கு எவ்வித விளைவையும் ஏற்படுத்தாது.

25. கிறிஸ்தவர்களின் ‘‘போப் ஆண்டவர்’’ மூன்று மகுடங்களை அணிந்திருப்பார்.

26. எலிக்கும், முயலுக்கும் பற்கள் வளர்ந்துகொண்டே இருக்கும்.

27. ‘‘O’’ குரூப் ரத்தம் உடையவர்களை ‘யுனிவர்சல் டோனர்’ என்பர்.

28. பாகிஸ்தான் - சீனா நாடுகளுக்கு இடையே உள்ள மலைத்தொடர் ‘காரகோரம்’

29. அதி உயர விமானப் போர்ப் பயிற்சிப் பள்ளி காஷ்மீர் மாநிலம் ‘குல்மார்க்’-ல் உள்ளது.

30. நெப்போலியன் - ‘Man of Desti-ney» என்று அழைக்கப்படுவார்.

31. குருவியின் கழுத்திலுள்ள எலும்புகள் 23.

32. வரிக்குதிரையின் ஆயுட்காலம் 22 வருடங்கள்

33. அணிலின் ஆயுட்காலம் 82 வருடங்கள்.

34. செம்மறி ஆட்டின் ஆயுட்காலம் 16 வருடங்கள்.

35. சிம்பன்சியின் ஆயுட்காலம் 41 வருடங்கள்.

36. பெருங்கரடியின் ஆயுட்காலம் 20 வருடங்கள்.

37. தீக்கோழியின் ஆயுட்காலம் 50 வருடங்கள்.

38. பென்குயினின் ஆயுட்காலம் 22 வருடங்கள்.

39. திமிங்கிலத்தின் ஆயுட்காலம் 30 முதல் 40 வருடங்கள்

40. கடலாமையின் ஆயுட்காலம் 200 வருடங்கள்

41. மூக்கில் பல் உள்ள விலங்கு முதலை.

42. பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும் விலங்கு ஒட்டகம்

43. ஈரூடகவாழிகள் ஆமை, தவளை, முதளை

44. பறக்க முடியாத பறவைகள் கிவி, ஏமு,பெஸ்பரோ, தீக்கோழி, பென் குயின்

45. தோலில் நச்சுச் சுரப்பிகள் உள்ள விலங்கு தேரை.

# தேடல்

நான் உன்னைத் தொலைத்து
நீ தேட
நீ என்னைத் தொலைத்து
நான் தேட
இருவரும் தேடினோம் எங்கெங்கோ
இதுவரை கிடைக்கவில்லை
நாமெங்கோ

உணர்வுக்குள் சென்று
உயிருக்குள் நனைந்து
உறவாடி மகிழ்ந்த
நாமெங்கே

என்னை அழைத்து
அளவளாவிப் பேசிய
ஆருயிர் அன்பே
நீயெங்கே

உன்னை அணைத்து
உள்ளம் நனைத்த
உன்னுயிர் அன்பே
நானெங்கே

நம்மை இணைத்த நல்மனம் எங்கே
நன்றி சொல்வோம் தினம் இங்கே
அல்லும் பகலும் உன் நினைவு
அழுது துடிக்குதே என் உணர்வு

- சரவிபி

# கணினி வடிவமைப்பு

எண்ணொடு எழுத்தும் இங்கே
எழிலுரு காணும்; நோக்கும்
கண்ணொடு உறவு கொள்ளும்
கவிதையும் பாட்டும்; தாரும்
வண்ணமே பொருளைச் சொல்லும்
வடிவமே அசைவைச் சொல்லும்
சிண்டுமாம் மனதை ஏட்டின்
சீர்களும் உரைநடையும்

தலைப்பினைப் பார்த்த தற்குத்
தகுந்தநல் ஓவி யத்தைக்
கலைநயத் தோடு சேர்க்கக்
கதையையும் மாற்றிச் சொல்லும்
புலையென சிந்தை யாலே
புனைந்ததோர் ஏடே ஆயின்
தலையென கற்ப னையை
கொடுத்திடும் வடிவ மைப்பாம்

கற்பனைக் கேற்ற வண்ணம்
காட்டலாம் அட்டா எட்டைப்
பற்றியே பேச வைக்கும்
பாங்கினைத் தரலாம் கண்டு
முற்றுமே பொருளுக் கேற்ற
முகங்களை அதிலே தார
நற்றுணை வடிவ மைப்பாம்
நம்பினேன் ஐயம் இல்லை

**- தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு